[1975 ஏப்ரல் 18

THIRU K. M. SUBRAMANIAM: From the various answers to previous questions and the answer to the present question, it appears that this Socialist Government seems to be fond of joint sectors. Do they believe that these joint sectors should continue?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இது எல்லா மாநிலங்களிலும் இருக்கிறது. இதை மத்திய சர்க்காரும் வரவேற்று இருக்கிறது. ஜாயின்ட் செக்டாரில் வைப்பதுதான் நமது கொள்கை.

திரு. நா. வீராசாமி: நமது சர்க்கார் கொள்கைப்படி இந்தத் தொழிற்சாலைகளை ஜாயின்ட் செக்டாரில் அமைக்க ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது. ஜாயின்ட் செக்டாரில் துவங்கப்படுகிற இந்தத் தொழிற்சாலையில் 90 சத விகிதம் இந்த நாட்டைச் சேர்ந்தவர் களுக்கே வேலை தரப்படவேண்டுமென்று இந்தச் சர்க்கார் ஆணை பிறப்பித்திருக்கிறதா? இல்லையென்றால் அப்படி ஆணை பிறப்பித்து இனிமேலாவது தமிழ்நாட்டில் அமைக்கப்படுகிற தொழிற்சாலை களில் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்களுக்கே 90 சதவீதம் வேலை தரப்படவேண்டுமென்ற உத்தரவைப் பிறப்பிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: ஏற்கெனவே இது போல அரசாங்கத்தின் சார்பாக ஒரு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக் கிறது. நம் நாட்டில் ஆரம்பிக்கப்படுகிற தொழிற்சாலைகளில் நம் நாட்டைச் சேர்ந்தவர்களுக்கே முக்கிய இடம் தரப்படவேண்டு மென்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இதுபோன்ற ஜாயின்ட் செக்டார் நிறுவனங்களில் இது பின்பற்றப்பட்டு வருகிறது.

*707 Q.—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Industries and Electricity be pleased to state—

(*a*) whether there is any proposal under the consideration of the Government to set up a unit for the manufacture of Seamless Tubes in the joint sector in the State; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) & (இ): தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் ஆண்டு ஒன்றுக்கு 60,000 டன்கள் பற்ற வைப்பு இல்லாத உருக்குக் குழாய்கள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலை ஒன்றை கூட்டுத்துறையில் அமைக்க அனுமதி கேட்டு இந்திய அரசுக்கு விண்ணப்பித்துள்ளது.

1975 ஏப்ரல் 18]

திரு. என். கே. பழனிசாமி: ஜாயின்ட் செக்டார் போய் நாஷனல் செக்டார் என்று வந்துவிட்டது. பொதுஜனங்கள் பணத்தை தனிப்பட்ட சிலர் கையாண்டு டாமினேட் செய்கிற பொஸிஷன் தான். கூட்டுறவு அமைச்சர் வெளிநாடுகளுக்கு எல்லாம் சென்று அந்த டீடைல்சுகளை எல்லாம் அறிந்து வந்திருப்பார் என்று நினைக்கிறேன். இன்னும் பெண்டிங்காக இருக்கிற பல தொழில்களை எல்லாம் எப்போது ஆரம்பிக்க வாய்ப்பிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இந்தத் தொழிற் சாலையைப் பொறுத்தவரையில் திருச்சி, பாரத் ஹெவி எலெக்ட்ரிகல்ஸ் நிறுவனமே ஆரம்பிக்க இருப்பதாக ஒரு குறிப்பு இருக்கிறது.

As Bharat Heavy Electricals Ltd., Trichy had proposed to set up a seamless steel tubes project in this State, TIDCO was advised not to pursue the question of setting up a similar project in the State. However TIDCO has been requested to as certain the progress, if any, made by the Bharat Heavy Electricals, Ltd. and send a report.

* 708 *Q*.—THIRU A. PARANDHAMAN : Will the Hon. the Minister for Industries and Electricity be pleased to state whether there is any proposal under the consideration of the Government to set up a plant either in Public Sector or Joint Sector for producing Polythene Granules?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இல்லை.

Sugar cane cess fund

* 709 *Q*.—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Agriculture be pleased to state--

(*a*) whether the Government receive cess from sugar mills in the State ; and

(*b*) if so, the amount collected during 1973 and 1974?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: (அ) ஆம்.

(இ) 1973 இல் ரூ. 358.39 லட்சம்.

1974 இல் ரூ. 340.45 லட்சம்.